**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**<u>ஆணை நாள்: 09.11.2020</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

•••••••••

**<u>வழக்கு எண். NC2209/F/2019 (SA5551/F/2018)</u>**

**திரு Y.வேணுகோபால் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**செயற்பொறியாளர், இ (ம) ப,**
**திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம்,**
**பள்ளிகொண்டா - 635 809. வேலூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு**

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 15.02.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 12.04.2016 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 25.06.2016 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 14.06.2016 |
| ஆணை நிறைவேற்றப்படாமை மனு நாள் | 21.09.2019 |

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் திரு Y.வேணுகோபால் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு S.விஜயகுமார், பொதுத் தகவல் அலுவலர், செயற்பொறியாளர், இ (ம) ப, தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 15.02.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், M.கோபால் த/பெ. முனிசாமி, ரெட்டி மின்

இணைப்பு எண்.456-010-263 வழங்கப்பட்ட விண்ணப்ப நகல், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட இணைப்புகள் விபரம், விண்ணப்பத்தில் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நகல், ஒரே சர்வே எண்.488/1Cல் இணைப்பு எண்.6ல் உரிமம் உள்ளவர்களிடம் மின் இணைப்பு எண்.263 வழங்க விண்ணப்பத்தில் தடையில்லா சான்றில் உரிமம் பெற்றவர்களிடம் கையொப்பம் வேண்டுமா? வேண்டாமா? என்ற விபரம், வேண்டாமெனில் மின் இணைப்பு அதற்குண்டான அரசு ஆணை நகல், சர்வே எண்.488/1C மின் இணைப்பு எண்.6ல் உரிமம் பெற்றவர், அதே எண்ணில் மின் இணைப்பு எண்.263ம் பெற்றவர் மின் இணைப்பு எண்.6ம் பயன்படுத்தலாமா என்ற விபரம், பயன்படுத்தலாமெனில் மின் இணைப்பு விதி ஆணையின் நகல், கிணற்றிற்கும் ஆழ்துளை கிணற்றிற்கும் குறைந்தபட்ச இடைவெளி எவ்வளவு தூரம் (மின் இணைப்பு விதிகளின் படி) இருக்க வேண்டும் என்ற விபரம் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர் இயக்கமும், பராமரிப்பும், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 18.02.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர், இ (ம) ப, பள்ளிகொண்டா அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 20.03.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 12.04.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ செயற்பொறியாளர்/ மேம்பாடு/ TA, திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம், திருப்பத்தூர் அவர்களுக்கு தாக்கல் செய்தார். மேல்முறையீட்டு அலுவலர் 16.05.2016 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 25.06.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் **வழக்கு எண். SA 5551/F/2016-ல் 14.06.2017** அன்று ஆணையம் விசாரணை மேற்கொண்டு, மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை 30 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 21.09.2019 தேதியிட்டு ஆணை நிறைவேற்றப்பட்டாமை மனுவினை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக ஆஜரான மேல்முறையீட்டாளர், தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு ஆணையத்தின் 14.06.2017 தேதியிட்டு 30 தினங்களுக்குள் தகவல் வழங்கவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டும் இதுநாள்வரைப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தில் எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், பள்ளிகொண்டா, மேல்முறையீட்டாளரின் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு முழுமையான தகவல் வழங்கப்படுமென்று ஆணையத்தில் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. வாத, பிரதிவாதங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் பரிசீலிக்கையில், மேல்முறையீட்டாளருக்கு இதுநாள்வரை எவ்விதத் தகவலும் முழுமையாக பொது அதிகார

அமைப்பினரால் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

- **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 15.02.2016 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 15.02.2016 தேதியிட்ட மனுவிற்கு எவ்விதமான தகவலும் வழங்காத சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் அதிகபட்ச அபராதம் ரூ.25,000/- ஏன் விதிக்கலாகாது என்பதற்குரிய எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலரை ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC2209/F/2019 (SA5551/F/2018)</u>

<u>பெறுநர்</u>

**பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர், இ (ம) ப,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகம்,
பள்ளிகொண்டா - 635 809. வேலூர் மாவட்டம்.**

<u>மனுதாரர்</u>

**திரு Y.வேணுகோபால்,
எண்.205, குருஜீ நகர்,
ராஜலிங்க நகர் விரிவு,
கல்புதூர், காட்பாடி அஞ்சல்,
வேலூர் மாவட்டம் - 632 007.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020